வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 24.09.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 268 | பக்கங்கள் : 12

# நாட்டை கட்டியெழுப்பும் பணிக்கு சகல மக்களின் ஆதரவும் தேவை!

## கன்னி உரையில் ஜனாதிபதி அநுரகுமார



கொழும்பு, செப்ரெம்பர் 24

**நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் அனைத்து மக்களினதும் ஆதரவை எதிர்பார்க்கிறேன். இலங்கை தற்போதைய நெருக்கடியை புரிந்து கொண்டுள்ளது. இவ்வாறான நெருக்கடிகளை சமாளிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். எமக்கு சர்வ தேசத்தின் ஆதரவு அவசியமானது - இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்த பின்னர், நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமது நாட்டின் ஜனநாயகத்தின் மிக முக்கியமான அம்சம் என்னவென்றால், மக்கள் தங்களைத் தாங்களே ஆள ஓர் ஆட்சியாளரை தேர்ந் தெடுப்பது தான். தேர்தல் அறிவிப் போடும் ஆட்சியாளரை தேர்ந்தெடுப்பதோடும் மட்டும் ஜனநாய கம் முடிந்து விடுவதில்லை.

"ஜனநாயகம் என்பது அடிப்படை அம்சம் என்றாலும், நம் நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு கட்டமைப்புகளின்

11



## அநுரகுமார ஜனாதிபதியாக நேற்று பதவிப் பிரமாணம்!

கொழும்பு, செப். 24

நாட்டின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பிரதம நீதியரசர் ஜெயந்த ஜெயசூரிய முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். மிகவும் எளிமையாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், வெளிநாடுகளின் இராஜதந்திரிகள், அரச உயர் அதிகாரிகள், தேசிய மக்கள்

11

## பதவி விலகினார் தினேஷ்!

கொழும்பு, செப். 24

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவி ஏற்றதை அடுத்து, பிரதமர் பதவியில் இருந்து தினேஷ் குணவர்தன நேற்று விலகியுள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அமைச்சர்களும் பதவியிலிருந்து விலகவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சர்களின் தனிப்பட்ட ஊழியர்களும் தமது பணியை இராஜினாமா செய்யவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## பொதுத் தேர்தலை சஜித்துடன் இணைந்து சந்திக்க தீர்மானம்!

### அழைப்பு விடத்தயாராகிறது ஐதே.க.!

கொழும்பு, செப். 24

அடுத்து நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக இணைந்து செயல்படுவதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை மாலை ரணில்

11

## அநுரவுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கு ஆவல்

### இந்தியப் பிரதமர் மோடி

கொழும்பு, செப். 24

இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடைய 9ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்காக அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, இந்திய பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

நம்மிடையேயான பன்முக ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்குவதற்காக உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற ஆவலுடன் உள்ளேன்

11



நேற்றைய தினம் ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திஸநாயக்க கண்டியில் மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற சமயம்...

## வடக்கு ஆளுநரும் பதவி விலகினார்!

கொழும்பு, செப். 24

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தனது பதவியை இராஜிநாமா செய்தார்.

புதிதாக பதவியேற்ற ஜனாதிபதி புதிய ஆளுநரை நியமிப்பதற்கு வசதியாக மரபுப்படி சார்ள்ஸ் தனது பதவியை

11

## புதிய பட்டுப்பாதைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு சீனா ஆர்வம்

### வாழ்த்துச் செய்தியில் அந்நாட்டு ஜனாதிபதி

கொழும்பு, செப். 24

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு, சீன மக்கள் சார்பில் வாழ்த்து தெரிவிப்பதாக, ஜனாதிபதி ஜி ஜின்பிங், வாழ்த்து தெரிவித்துள்ளார்.

உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும், பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும், புதிய பட்டுப்பாதை திட்டத்தில், வெற்றிகரமான விடயங்களை முன்னெடுப்பதற்கும் ஆர்வமாக உள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

சீன அரசாங்கத்தின் சார்பிலும்

11

## படகுடன் மீனவரின் சடலம் நேற்று கரையொதுங்கியது

### அராலிப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 24

அராலியில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவரின் சடலம் நேற்று காலை மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 அளவில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் நேற்று காலை வரை கரைதிரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

11

## பாராளுமன்றத் தேர்தலை ஒரு சின்னத்தில் சந்திப்போம்!

### அரியநேத்திரன் அழைப்பு

மட்டக்களப்பு, செப். 24

ஜனாதிபதித் தேர்தலில் பிரிந்திருந்தாலும் கருத்து முரண்பாடுகளால் பிரசாரங்களை மேற்கொண்டாலும் கூட, இனிவரும் காலங்களில் அவற்றைத் தவிர்த்து பாராளுமன்றத் தேர்தலில் ஒரு குடையின் கீழ் ஒரு சின்னத்தில் போட்டியிட அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் பா. அரியநேத்திரன்.

11

## தமிழ்த் தேசியத்துக்காகவே தமிழர்கள் வாக்களித்தனர்!

### கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, செப். 24

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் தமிழ்த் தேசியத்துக்கானவையே. அத்துடன், 30 சதவீதமான தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணித்துள்ளனர் என்று கூறியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறிக்கிடந்த தமிழ்த் தேசியத்தை பொது வேட்பாளர் மீளிணைத்துள்ளார்!

## ஐங்கரநேசன் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 24

முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவு வரை தேசமாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் அதன் பின்னர் சாதிகளாகவும் சமயங்களாகவும் பிரதேசங்களாகவும் கட்சிகளாகவும் சிதறடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சார்பில் தமிழ்ப் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட பா. அரியநேத்திரன் சிதறிக்கிடக்கும் தமிழ்த் தேசிய உணர்வுத் தளத்தை மீளக்கட்டமைப்பதில் காத்திரமான பங்காற்றியுள்ளார் -என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தொடர்பில் நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தென்னிலங்கை கட்சிகளின் பிரதான வேட்பாளர்கள் வடக்கு, கிழக்கில் கோடான கோடி பணத்தை செலவழித்து தமிழ் வாக்குகளை வியாபார பண்டமாக்கிக் கொள்வனவு செய்ய முயன்றனர்.

இதற்கு தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் துணைபோயினர். ஆனால், விலைபோகாத தமிழர்களாக இரண்டேகால் இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் தமிழ்ப் பொது வேட்பாளரின் சங்கு சின்னத்துக்கு தங்கள் வாக்குகளை வழங்கியுள்ளனர். தமிழ்த் தேசிய அரசியலை சீர்செய்து நேர் செய்யும் பயணத்தில் பொதுவேட்பாளர் பெற்றிருக்கும் வாக்குகள் பலமான அடித்தளத்தை உருவாக்கியுள்ளது - என்றுள்ளது. (ஐ)

# 35 வேட்பாளர்கள் கட்டுப்பணம் இழந்தனர்!

கொழும்ப, செப். 24

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட பிரதான மூன்று வேட்பாளர்களை தவிர, ஏனைய 35 வேட்பாளர்களும் கட்டுப்பணத்தை இழந்தனர் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவான அநுரகுமார திஸநாயக்க, இரண்டாம் இடத்தை பெற்ற சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் மாத்திரமே தாம் செலுத்திய கட்டுப் பணத்தை மீளப்பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், வரலாற்றில் அதிகளவான வேட்பாளர்கள் 2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் கட்டுப் பணத்தை செலுத்தியிருந்தனர். இதற்கமைய 39 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்திய நிலையில், அவர்களில் 38 வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஊடாக போட்டியிட்ட வேட்பாளர் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், சுயேச்சை வேட்பாளர் ஒருவருக்கு 75 ஆயிரம் ரூபாயும் கட்டுப்பணமாக அறவிடப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ஐ)

# தேசிய மக்கள் சக்தியின் எம். பியாக நிபுண ஆராச்சி!

கொழும்பு, செப். 24

தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் நிபுண ஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். தேர்தல் ஆணைக்குழுவினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று திங்கட்கிழமை வெளியிடப்பட்டது.

அரசியலமைப்பின் 99 (13) (ஆ) உபபிரிவின் கீழ் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய இந்த வெற்றிடத்தை நிரப்புமாறு குறித்த உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியின் தெரிவத்தாட்சி அதிகாரிக்கு 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 64(1) பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தெரிவத்தாட்சி அதிகாரி மூலம் அரசியலமைப்பின் 99 (13)(ஆ) உப பிரிவு மற்றும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம்



இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 64 (2) இன் கீழ், குறித்த தேர்தல் தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினராக லக்ஷ்மன் நிபுண ஆராச்சி நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தேர்தலுக்கு பின் முறைப்பாடுகள் எதுவும் இல்லை!

கொழும்பு, செப். 24

தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் இதுவரை எந்த வித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை. வரலாற்றில் நடைபெற்ற தேர்தல்களில் இந்த ஜனாதிபதி தேர்தல் மிகவும் அமைதியான தேர்தலாகும் என்று சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயல்பாட்டின் (பவ்ரல்) நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மேலும், தேர்தல் இடம்பெற்ற பின்னர் பல்வேறு சட்ட மீறல்கள், வன்முறைகள் தொடர்பில் கடந்த காலங்களில் முறைப்பாடுகள் பதிவானபோதும் இந்த முறை ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் இதுவரை எந்த முறைப்பாடும் பதிவாகவில்லை.

இதனால் தேர்தலுக்கு பின்னரான இந்த காலப்பகுதியில் தொடர்ந்தும் அமைதியாக செயல்படுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# ஓட்டோ மீது மரம் வீழ்ந்து 3 வெளிநாட்டவர் காயம்!

கொழும்பு, செப். 24

முச்சக்கர வண்டியின்மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் வெளிநாட்டு பெண்கள் மூவர் காயமடைந்தனர்.

மொனராகலை - வெல்லவாய - கொஸ்லந்த பிரதான வீதியில் தியலும நீர்வீழ்ச்சிக்கு அருகில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில், முச்சக்கரவண்டியில் பயணித்த மூன்று வெளிநாட்டுப் பெண்கள் காயமடைந்து கொஸ்லாந்தை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)





# தலதா மாளிகையில் ஜனாதிபதி வழிபாடு!

கொழும்பு, செப். 24

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று திங்கட்கிழமை கண்டி தலதா மாளிகைக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

தலதா மாளிகையில் வழிபட்ட ஜனாதிபதி பின்னர் மகாநாயக்க தேரர்களையும் சந்தித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார். (ஐ)

# ஐக்கிய, பலமான இலங்கையை உறுதி செய்ய வாழ்த்துகிறேன்!

## அநுரவுக்கு மகிந்த வாழ்த்து

கொழும்பு, செப். 24

ஐக்கியமான மற்றும் பலமான இலங்கையை உறுதி செய்வதிலும் அநுர குமார திஸநாயக்க வெற்றியடைய வாழ்த்துவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்ற அநுரகுமார திஸநாயக்கவை மகிந்த ராஜபக்ஷ இட்ட பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதிலும் ஐக்கியமான மற்றும் பலமான இலங்கையை உறுதி செய்வதிலும் அவர் வெற்றியடைய வாழ்த்துகிறேன் - என்று கூறியுள்ளார். (ஐ)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்!

யாழ்ப்பாணம், செப். 24

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நபர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - தனங்களப்புப் பகுதியை சேர்ந்த 41 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர், கடந்த 26ஆம் திகதி சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது பஸ் மோதி படுகாயமடைந்தார். சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த சனிக்கிழமை இவர் உயிரிழந்தார். (ஐ)

# வெற்றியை கொண்டாடிய இளைஞர் காயமடைந்தார்

கொழும்பு, செப். 24

அநுரகுமார திஸநாயக்காவின் வெற்றியை பட்டாசு வெடித்து கொண்டாடிய இளைஞர் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று களுத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை - ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞனே இவ்வாறு காயமடைந்தார்.

குறித்த இளைஞர் கொளுத்திய வெடி ஒன்று வெடிக்காத நிலையில் அதனை பரிசோதித்த போதே திடீரென வெடித்ததில் அவர் காயமடைந்தார். (ஐ)

# பரீட்சை வினாத்தாள் கசிவு; பணிப்பாளர் ஒருவர் கைது!

கொழும்பு, செப். 24

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்தமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் ஒருவரே மஹரகம குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.09.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் அரசு கட்சியின் தோல்வி

வடக்கு, கிழக்கில் பல பகுதிகளிலும் சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்திருக்கின்றனர். தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்தமைக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானம்தான் காரணம்(?) சுமந்திரன் மற்றும் சாணக்கியனும் அவர்களுக்கு ஆதரவானவர்களும் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக பிரசாரங்களில் ஈடுபட்டனர். தமிழ்ப் பொது வேட்பாளரை தோற்கடிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ் அரசுக் கட்சியின் கோரிக்கைக்கு அமைவாகத்தான் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரித்தார்கள் என்னும் கதையொன்றை தமிழ் அரசுக் கட்சியின் ஓர் அணியினர் கூறிவருகின்றனர் - இது உண்மையா?

முதலில் தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ் மக்கள் தோற்கடிக்கவில்லை. ஆனால், பெருவாரியாக வாக்களிக்கவில்லை. தேர்தல்களில் இது சாதாரணமான ஒன்றுதான். ஏனெனில், மிகவும் குறுகிய காலத்தில் இவ்வாறானதொரு புதிய முயற்சியை வெற்றிகரமான முயற்சியாக்குவது மிகவும் சவாலானது. எனினும், தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ் மக்கள் கணிசமாக ஆதரித்திருக்கின்றனர்.

சஜித் பிரேமதாஸவை ஆதரித்த மக்கள் இப்போது கவலைப்படுவதையும் "ஈழநாடு" அறியும். பலர் அவ்வாறு எங்களிடம் கூறுகின்றனர். வெற்றிபெறக்கூடிய ஒருவர் என்று நினைத்துதான் நாங்கள் ஆதரித்தோம் - தோல்வியடைவார் என்று தெரிந்திருந்தால் பொது வேட்பாளருக்குத்தான் வாக்களித்திருப்போம் என்பதே பலருடைய கவலையாக இருக்கின்றது. இங்கு கேட்க வேண்டிய கேள்வி வேறு. அதாவது, தோல்வியடையப் போகும் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்குமாறு கூறியவர்களின் பதில் என்ன? தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பது பயனற்றது என்றால் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்ட தமிழ் வாக்குகளின் பெறுமதி என்ன? இதற்கு சுமந்திரனும் சாணக்கியனும் பதிலளிப்பார்களா? இனியாவது இவர்கள் திருந்த வாய்ப்பு உண்டா?

முன்னைய மூன்று தேர்தல்களின்போதும் ராஜபக்ஷக்களுக்கு எதிராக வாக்களித்தல் என்பதே பிரதான விடயமாக இருந்தது. அப்போது, ஒப்பீட்டடிப்படையில் ஒருவரை விடவும் இன்னொருவர் பரவாயில்லை என்னும் அடிப்படையில்தான் தமிழ் மக்களின் வாக்குகள் பிரயோகிக்கப்பட்டன. ஆனால், இம்முறை தேர்தல் களம் அப்படியான ஒன்றாக இருந்திருக்கவில்லை. நிலைமைகளை துல்லியமாகக் கணிக்கக்கூடியதாக இருந்தது. மூன்று மாதங்களாக வெளிவந்த அனைத்து கணிப்புகளுமே அநுரகுமார திஸநாயக்கவுக்கு சாதகமாகவே இருந்தன. அவர் வெற்றிபெறுவதற்கான சூழலே மிகவும் பிரகாசமாக இருந்தது. ஆனால், இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ் அரசுக் கட்சி எதற்காக சஜித் பிரேமதாஸவை ஆதரித்தது?

இதற்கு பின்னாலுள்ள திரைமறைவு இரகசியம் என்ன? ஒன்றில் வெற்றி பெறக்கூடியவரை ஆதரிப்பது என்றால் அநுரகுமார திஸநாயக்கவுக்குத்தான் தமிழ் அரசுக் கட்சி ஆதரவளித்திருக்க வேண்டும். தேர்தல் மேடைகளில் இனவாதம் கோலோச்சவில்லை என்று சுமந்திரனே கூறியிருக்கின்றார். அது உண்மையாயின், தமிழ் அரசுக் கட்சி வெற்றிபெறப் போகும் ஒருவரை ஆதரிப்பதன் மூலம்தானே தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வு தொடர்பில் பேச முடியும். பின்னர் எதற்காக தோல்வியடையப் போகும் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முட்டாள்தனமான முடிவை எடுத்து தமிழ் மக்களை குழப்பியது?

உண்மையில், தமிழ் அரசுக் கட்சியின் அறிவிப்பால் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கவில்லை. மாறாக, சஜித் வெற்றி பெறக்கூடிய ஒருவர் என்று தவறாகப் புரிந்து கொண்டமையின் காரணமாகவே தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்திருந்தனர். சஜித்தை ஆதரிக்கும் முடிவில் தமிழ் அரசுக் கட்சி படுதோல்வி அடைந்திருக்கின்றது. அத்துடன், அரசியலை கணித்து அதற்கு ஏற்ப முடிவுகளை எடுக்கத் தெரியாத கற்றுக்குட்டிகளாகவும் தமிழ் அரசுக் கட்சியினர் இருந்திருக்கின்றனர் என்பதும் வெள்ளிடைமலை.

# இன, மத பிரிவினையை ஊக்குவிக்காத மிக அமைதியான தேர்தல் நடைபெற்றது

### ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு

கொழும்பு, செப். 24

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தல் இன, மதபேதங்களை மையப்படுத்தி பிரிவினைகளை ஊக்குவிக்காத மிக அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தலாக அமைந்திருந்தது என்று ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலை கண்காணிப்பதற்காக ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு நாட்டுக்கு வருகை தந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த நிலையில், தேர்தல் நிறைவடைந்ததையடுத்து செய்தியாளர் சந்திப்பை நேற்று கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடத்தியது.

இதன்போதே ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக்குழுவின் தலைமை அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் இன, மதபேதங்களை மையப்படுத்தி பிரிவினைகளை ஊக்குவிக்காத, மிக அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தலாக அமைந்திருந்தது.

தேர்தல் ஆணைக்குழு வெளிப்படைத்தன்மை, செயற்திறன்மிக்க தன்மையுடன், எவ்வித சந்தேகங்களையும் தோற்றுவிக்காத வகையில் செயல்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட 39 பேரில் பெண் வேட்பாளர்கள் எவரும் உள்ளடங்காமை மிகுந்த கரிசனைக்குரியது. எதிர் வரும் காலத்தில் இது குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டியது அவசியம்.

39 வேட்பாளர்களில் சிலர் பிரசார நடவடிக்கைகளைக்கூட முன்னெடுக்கவில்லை. அவர்களுக்காக அரச நிதி செலவிடப்படுவது கரிசனைக்குரிய விடயமாகும். இதனை சீரமைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கை வரலாற்றில் நடைபெற்ற மிகவும் அமைதியான தேர்தல் இதுவென தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கூறப்பட்ட அதே தினத்தில், திடீரென ஊரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை ஒன்றுக்கொன்று முரணான தன்மையைக் காண்பிக்கிறது.

தேர்தல் பிரசாரங்களின் போது சம்பள உயர்வு, வட்டி அற்ற கடன் போன்ற நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கும் போக்கு ஏற்புடையதல்ல.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கு தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் 5 ஆயிரம் முறைப்பாடுகளும், தேர்தல் தினத்தன்று 600 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றன - என்றும் கூறினார். (ஐ)

## செய்தி வாசிப்பாளர் ஆயிஷா ஜுனைதீன் காலமானார்!

கொழும்பு, செப். 24

நாட்டின் வானொலி, ரூபவாஹினி தொலைக்காட்சியின் முதல் முஸ்லிம் பெண் செய்தி வாசிப்பாளரான ஆயிஷா ஜுனைதீன் (வயது 74) காலமானார்.

தமிழ் மொழியோடு, ஆங்கிலம், சிங்கள மொழிகளிலும் இவர் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இதனால், ரூபவாஹினி தொலைக்காட்சியில் மொழி பெயர்ப்பாளராகவும் இவர் பணியாற்றியிருந்தார்.

இவரின் ஜனாஸா அஸர் தொழுகையின் பின்னர் கொழும்பு - குப்பியாவத்தை மையவாடியில் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# பாதுகாப்பு செயலராக சம்பத் துய்யகொந்த!



கொழும்பு, செப். 24

புதிய பாதுகாப்பு செயலாளராக ஓய்வு பெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இந்த நியமனத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வழங்கி வைத்தார்.

புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு செயலாளர் முன்னர் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டமைக்காக கறுப்புப் பட்டியலில் முன்னைய அரசாங்கம் அவரை சேர்த்திருந்தது.

உள்நாட்டுப் போரில் சம்பத் துய்யகொந்த 09 எம். ஐ. 24 தாக்குதல் ஹெலிகொப்டர் படைப் பிரிவின் விமானியாக செயல்பட்டுள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 24 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - புரட்டாதி 08
நல்ல நேரம் : 10.32 - 12.02
ராகு காலம் : 03.02 - 04.32
திதி : சப்தமி




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் நீங்கும். அரை குறையாக நின்ற வேலைகள் முடியும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்திற்கு ஆளாவீர்கள்

**மிதுனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர், நண்பர்களிடம் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வாகனம் தொந்தரவு தரும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களால் ஆதாயமுண்டு. சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். மதிப்பு உயரும் நாள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக செயல்படு வார்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்தேடி வருவார்கள்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். நட்பால் ஆதாயம் உண்டு.

**கும்பம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப் பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்துபோகும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**மீனம்**
சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். தைரியம் கூடும் நாள்.

# "ஒரே நாடு ஒரே தேர்தல் பா. ஜ. க. அரசின் சதி"

## தயாநிதிமாறன் எம். பி. குற்றச்சாட்டு

கோவை, செப். 24

"ஒரே நாடு ஒரே தேர்தல் பா. ஜ. க. அரசின் சதி என்று தி. மு. க. பாராளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் தெரிவித்தார்.

தி. மு. க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டம் கோவையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"ஒரே நாடு ஒரே தேர்தல் மத்திய பா. ஜ. க. அரசின் சதி. கடந்த 10 ஆண்டுகளாக மத்திய அரசு மக்கள் தொகை கணக்கெடுப்போ அல்லது சாதி வாரி கணக்கெடுப்போ நடத்தவில்லை. அதையெல்லாம் விட்டுவிட்டு ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்த திட்டமிடுகிறார்கள். காஷ்மீருக்கே இப்போது தான் தேர்தல் நடத்துகிறார்கள். பா. ஜ. க. அரசு ஏதோ சதி செய்கிறது.

பிரதமர் மோடி இந்தியாவில் இருப்பதே குறைவு. வெளிநாடுகளில் மட்டும் இருக்கிறார். மதத்தை வைத்தே பா. ஜ. க. அரசியல் செய்கிறது. அ. தி. மு. க. மிக கஷ்டமான காலத்தில் உள்ளது. முதுகு தண்டு வளைந்துள்ளதால் தான் அவர்களால் நிமிர முடியவில்லை. அ. தி. மு. கவை பா. ஜ. கவிடம் அடிமையாக வைத்திருந்தது பழனிச்சாமி செய்த தவறு"- என்றார்.

(எ)

# இலங்கையின் புதிய அரசுடன் பேசி மீனவர் பிரச்னைக்கு தீர்வு காணவும்

நாமக்கல், செப். 24

இலங்கையில் தற்போது புதிதாக அமைந்துள்ள அரசாங்கத்துடன் பிரதமர் நரேந்திர மோடி பேச்சுகளை நடத்தி, மீனவர் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாமக்கலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 'கந்து வட்டி ஒழிப்பு' மாநாடு நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"மக்களை கடன் வலையிலிருந்து மீட்கவும், கந்து வட்டி, நுண்நிதி குழு கடன்களுக்கான வட்டி விகிதங்களை ஆராய்ந்து முறைப்படுத்தவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது தொடர்பில் பிரதமருக்கு, முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியபோதும், உரிய நடவடிக்கை இல்லை. இலங்கையில் தற்போது புதிதாக அமைந்துள்ள அரசிடம் பிரதமர் மோடி பேச்சுகளை நடத்தி, மீனவர் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும்"- என்றார்.

(எ)

# "இந்து தர்மம் என்றுமே அழிக்க முடியாதது"

## தமிழக ஆளுநர் ரவி திட்டவட்டம்



நாகர்கோவில், செப். 24

"பாரதம், இந்து தர்மம் இரண்டையும் பிரிக்க முடியாது என்றும் இந்து தர்மம் என்றுமே அழிக்க முடியாதது என்றும்"- தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்டம் வெள்ளிமலையில் அமைந்துள்ள ஹிந்து தர்ம வித்தியா பீடத்தின் 41ஆவது சமய வகுப்பு மாநாடு மற்றும் 35ஆவது பட்டமளிப்பு விழா திருவட்டாரில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ஆர். என். ரவி கலந்து கொண்டு சமய வகுப்பு மாணவ மாணவியருக்கு வித்யா பூஷன் பட்டங்களை வழங்கினார்.

இதை தொடர்ந்து நிகழ்ச்சியில் உரையாற்றிய ஆளுநர் தெரிவித்தவை வருமாறு, "இந்து தர்மம் தான் பாரதத்தை உருவாக்கியுள்ளது. பாரதம், இந்து தர்மம் இரண்டையும் பிரிக்க முடியாது. கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளாக அயலக ஆட்சியில் நமது தர்மத்தை அழிக்க என்னென்ன முடியுமோ அதற்கான முயற்சிகள் செய்தார்கள். அவற்றை எல்லாம் கடந்து வந்துள்ளோம்.

நமது தர்மம் என்றுமே அழிக்க முடியாதது. அதனை பலவீனப்படுத்த முயற்சிகள் நடைபெறுகின்றன. ஆனால், அவற்றில் அவர்கள் வெற்றி பெற மாட்டார்கள்"- என்றார்.

# அனைத்து தரப்பு மக்களையும் விஜய் சமமாக பாவிப்பது கேள்விக்குறியே

## மத்திய இணை அமைச்சர் முருகன்





கொளப்பாக்கம், செப். 24

"நடிகர் விஜய் அனைத்து தரப்பு மக்களையும் சமமாக பாவிப்பது கேள்விக்குறியே"- இவ்வாறு மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தெரிவித்தார்.

கொளப்பாக்கத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஒரே நாடு ஒரே தேர்தல் இந்த நாட்டுக்கு காலத்தின் கட்டாயம். இதற்காக பெரியளவில் ஆணைக்குழு அமைக்கப்பட்டு கருத்து கேட்டு அதனடிப்படையில் வரலாற்று சிறப்புமிக்க அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நடிகர் விஜய் பொதுவான நபராக இருப்பாரா என்பது கேள்விக்குறி. அரசியல் கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்றால் அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்து சொல்லக்கூடிய தலைவராக இருக்க வேண்டும். அப்போது தான் ஓர் அரசியல் கட்சியை நிர்வகிக்க முடியும். அவர் அனைத்து தரப்பு மக்களையும் சமமாக பாவிப்பது கேள்விக்குறியே"- என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தேர்தலில் வாக்களிக்கவில்லை!

## தேர்தல் ஆணையாளர் நாயகம் தகவல்

கொழும்பு, செப். 24

**இம்முறை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 35 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள், தமது வாக்குகளை செலுத்தவில்லை என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு, ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றிருந்த நிலையில், அவர்களில் 35 இலட்சத்து 20 ஆயிரத்து 438 பேர் வாக்களிக்கவில்லை.

அதற்கமைய, 21.54 வீதமான மக்கள், இம்முறை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவில்லை.

சாதாரணமாக ஜனாதிபதி தேர்தலின்போது, நாடளாவிய ரீதியில் 80 வீத வாக்குகள் பதிவாகி வருவது வழமையாகும்.

ஆனால், இம்முறை மிகவும் குறைவான வாக்குகளே பதிவாகியுள்ளன என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

# அடுத்த தேர்தலுக்கு முன் தேர்தல்களில் திருத்தம்!

## அநுரகுமார திஸநாயக்க அறிவிப்பு

கொழும்பு, செப். 24

அடுத்த தேர்தலுக்கு முன் தேர்தல்களில் திருத்தம் செய்ய முடியும் என நம்புகிறேன். சட்டத்தில் திருத்தங்கள் தேவை என்பதை உணர்ந்துள்ளோம். அதில் விசேட கவனம் செலுத்துவேன் என இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இரவு கொழும்பு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலின் இறுதி முடிவை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அநுர குமார திஸாநாயக்க இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு பல வழிகளில் நிலையற்று உள்ளது. மக்களின் விருப்பத்தினால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தினால் மட்டுமே நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை நாங்கள் கொண்டுள்ளோம்.

நம் நாட்டில் எந்த தேர்தலிலும் யாரும் இறக்கக்கூடாது.

நம் நாட்டில் பல விடயங்கள் மாற வேண்டும். தேர்தலை நடத்துவது, வெற்றியை கொண்டாடுவது, பின்னர் மற்றையவருக்கு பயத்தை ஏற்படுத்துவது போன்ற கலாசாரத்தை ஒழிக்க வேண்டும். நம் நாட்டில் உள்ள பல பிளவுகளை மிக விரைவாக சமரசம் செய்யவேண்டும். பேச்சுவார்த்தை மூலம் நாம் முன்னோக்கி செல்ல முடியும்- என்றார். (அ)

# அநுரகுமாரவுக்கு இலங்கை மக்கள் வழங்கிய ஆணையை மதிக்கிறேன்!

## அலி சப்ரி கூறுகிறார்



கொழும்பு, செப். 24

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான அநுரகுமார திசநாயக்கவிற்கு மக்கள் வழங்கியுள்ள ஆணையை முழுமையாக மதிக்கின்றேன் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அலி சப்ரி அநுரவுக்கு வாழ்த்து தெரிவித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

குறித்த பதிவில்-

நீண்ட மற்றும் கடினமான பிரசாரத்துக்குப் பிறகு, தேர்தல் முடிவுகள் இப்போது தெளிவாக உள்ளன.

நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்தபோதிலும், இலங்கை மக்கள் தமது முடிவை எடுத்துள்ளனர். மேலும் அநுர குமார திஸாநாயக்கவுக்கான அவர்களின் ஆணையை நான் முழுமையாக மதிக்கிறேன். ஜனநாயகத்தில், மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிப்பது முக்கியம், நான் அதை தயக்கமின்றிச் செய்கிறேன்.

திஸாநாயக்க மற்றும் அவரது குழுவினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாட்டை வழிநடத்துவது எளிதான காரியம் அல்ல, அவர்களின் தலைமை இலங்கைக்கு மிகவும் ஆழமாகத் தகுதியான அமைதி, செழிப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைக் கொண்டு வரும் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன்.

அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மகத்தானவை, கடந்த காலத்தின் படிப்பினைகளை - தங்களுக்கு முன் அதிகாரத்தில் இருந்தவர்களின் வெற்றி தோல்விகள் இரண்டையும் அவர்கள் பிரதிபலிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

உண்மையான சவால் தேர்தலில் வெற்றி பெறுவது அல்ல, புத்திசாலித்தனமாக ஆட்சி செய்வதும், மக்களின் தேவைகளுக்கு உண்மையாக இருப்பதும்தான் என்பதை வரலாறு நமக்குக் கற்றுத் தருகிறது. கடந்த காலங்களில் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தாங்கள் அளித்த வாக்குறுதிகளை கண்டுகொள்ளாமல், உண்மையான மாற்றத்தை கொண்டு வருவதற்கான வாய்ப்பை தவறவிட்டனர்.

திஸாநாயக்கவும் அவரது குழுவினரும் இந்த கடந்த கால தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு வெளிப்படைத் தன்மை, ஒருமைப்பாடு மற்றும் நாட்டின் நீண்டகால நன்மைக்காக அர்ப்பணிப்புடன் வழி நடத்துவார்கள் என்று நம்புகிறேன் - என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அநுரகுமார திஸாநாயக்கவுடன் சேர்ந்து பணியாற்ற எதிர்பார்ப்பு

## ஜப்பான் தூதுவர் வாழ்த்து

கொழும்பு, செப். 24

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகொஷி ஹிதேகி, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவை மேம்படுத்துவதில் அநுரகுமார திஸாநாயக்கவுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கை மக்கள் தமது தலைவரை தெரிவு செய்வதில் இலங்கையின் ஜனநாயக செயற்பாட்டில் தீவிரமாக பங்குபற்றியமைக்காக நாம் வாழ்த்த விரும்புகிறோம். அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இலங்கை மக்களின் தலைமையிலான புதிய நிர்வாகத்துடன் பொருளாதார மற்றும் சமூக இலக்குகளை அடைவதற்கும் எமது வலுவான உறவை அடைவதற்கும் ஜப்பான் தயாராக இருக்கும்.

இலங்கையிலும், ஜப்பானிலும் தலைவர்கள் மாறினாலும் எங்களுடைய நட்பு வலுப்பெற்றது என்பது வரலாறு. இலங்கையில் இம்முறை நடைபெறவுள்ள தேர்தல், கடந்த காலத்தைப் போலவே, புதிய பக்கங்களிலும் புதுப்பிக்கப்பட்ட நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் கதைகளால் நிரப்பப்படும் வகையில் எமது உறவின் பக்கம் திரும்பும் என்று நாங்கள் நம்புகிறோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தேர்தல் அரசியலுக்கு விடை கூறிய மைத்திரி

கொழும்பு, செப். 24

இனி எந்தவொரு தேர்தலிலும் தான் போட்டியிடப்போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவருக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

தேர்தலில் களமிறங்காவிட்டாலும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் மைத்திரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 3 இலட்சத்து 300 வாக்குகள் இந்த தேர்தலில் நிராகரிப்பு

கொழும்பு, செப். 24

2024 செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மூன்று லட்சத்து 300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தாலும் ஒரு கோடியே 36 லட்சத்து 19 ஆயிரத்து 916 பேரே வாக்களித்திருந்தனர். வாக்கு பதிவு (79.46 சதவீதம்)

கடந்த ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை நிராகரிக்கப்பட்ட வாக்கு வீதம் அதிகரித்துள்ளது.

இலங்கையில் 1982 ஒக்ரோபர் 20 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது, அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில், 1.22 சதவீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

1988 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 1.76 சதவீத வாக்குகளும், 1994 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது 1.97 சதவீத வாக்குகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

1999 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது 2.31 சதவீத வாக்குகளும், கடைசியாக 2019 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது 0.85 சதவீத வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

இம்முறையே நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 2 சதவீதத்தைக் கடந்துள்ளது.

# நாட்டின் பிரஜைகளை எதிர்கால உலகுக்கு இட்டுச் செல்லும் விமானியாக அநுரகுமார

## சபாநாயகர் மஹிந்த யாப்பா வாழ்த்து

கொழும்பு, செப். 24

இலங்கையின் புதிய நிறைவேற்று ஜனாதிபதியுடனான புதிய பயணத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் தனது உத்தியோகபூர்வ முகநூல் கணக்கில் புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில்-

இலங்கையின் பிரஜைகளை எதிர்கால உலகுக்கு இட்டுச் செல்லும் புதிய விமானியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.

வேற்று ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்றமை நாடு முழுவதும் உள்ள மக்கள் அமைதியான முறையில் தமது வாக்குகளைப் பயன்படுத்தியதன் மூலம் ஏற்பட்ட மாற்றமாகும் என்பது எனது அவதானிப்பு.

எந்தவொரு தீவிரமான தேர்தல் வன்முறைச் செயற்பாடுகளும் இன்றி இவ்வாறானதொரு முடிவைப் பெற்றமைக்கான கௌரவம் நிச்சயமாக வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாக அனுபவிக்கத் தீர்மானித்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

அதே போல் தேர்தல் ஆணையம், ஆயுதப்படைகள், பாதுகாப்புத் துறையின் உண்மையான வெற்றியாகும்.

அநுரகுமார திஸாநாயக்க மீதான இந்த மக்கள் நம்பிக்கை ஒரே இரவில் தோன்றியதல்ல, அது பாராளுமன்ற ஜனநாயகத்தில் நீண்ட காலமாக ஈடுபட்டதன் விளைவு என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

அவர் முன்னால் இப்போது எளிதான சவால் எதுவும் இல்லை. நமது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்பின் மாறுபாட்டை உணர்ந்துகொண்டு, உலகளாவிய புவிசார் அரசியல் போக்குகளுடன் மோதாமல் இந்த நீண்ட பயணத்தை அவர் நிலையானதாக மேற்கொள்ளவேண்டும்.

அதற்கு அவருக்கு போதுமான அரசியல் விருப்பம் இருப்பதாக நான் நம்புகிறேன்-என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு குறித்து அநுரவுடன் பேசுவோம்!

## தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கருத்து

யாழ்ப்பாணம், செப். 24

**புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்க புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பணிகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இணங்கியிருக்கும் நிலையில், அதனை முன்னிறுத்தி அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்குப் பூரண ஆதரவை வழங்குவோம் எனவும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு குறித்து அவருடன் இனிவருங்காலங்களில் பேசுவோம் எனவும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.**

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுர குமார திஸாநாயக்க நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில், அவருக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கும் வட, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அவரது வெற்றி குறித்து பின்வருமாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

**எம்.ஏ.சுமந்திரன்**

“அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி சிறந்த முன்னேற்றகரமான நகர்வாகும். நாம் எந்த வேட்பாளரை ஆதரிப்பதென ஆராய்ந்தபோது சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லாத பல விடயங்கள் அநுரகுமார திஸாநாயக்கவின் விஞ்ஞாபனத்தில் இருந்தன.

அதேபோன்று அவர் அரசியலமைப்பில் உள்ளவாறு மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்துவதாகவும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்துக் கலந்துரையாடலாம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அதுமாத்திரமன்றி 2015 - 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு உருவாக்க செயன்முறையைத் தொடர்ந்து முன்னெடுத்து முடிவுறுத்துவதாகவும், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதாகவும் அவர் உத்தரவாதம் அளித்திருந்தார்.

எனவே அவர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர் முன்னெடுக்கக்கூடிய இவ்வனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவோம்“ என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

**தர்மலிங்கம் சித்தார்த்தன்**

“ஜனாதிபதித்தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி மிகச்சிறந்த மாறுதலாகும். இவ்வேளையில் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எனது வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் நாட்டை ஊழல் மோசடிகளற்ற தூய நாடாக மாற்றியமைப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இருப்பினும் தமிழ்த்தேசிய பிரச்சினையைப் பொறுத்தமட்டில், இனிவருங்காலங்களிலேயே இதுபற்றி அவருடன் பேசுவோம். தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் அவர் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதே எனது கோரிக்கையாக இருக்கின்றது“ என புளொட் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் குறிப்பிட்டார். (அ)

# இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அநுரகுமாரவே!

கொழும்பு, செப். 24



இலங்கை தனது இறுதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவுசெய்துள்ளது என ஜே.வி.பியின் மத்தியகுழு உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

இந்த ஜனாதிபதியின் பதவிக் காலத்துக்கு பின்னர் நீங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை பார்க்க மாட்டீர்கள் என அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கும் அரசியல் உறுதிப்பாடுடைய ஒருவர் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நோக்கத்துக்கு மக்கள் தங்களின் ஆதரவை தரவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவர் குறிப்பிட்டார். (அ)

# அரசியலில் இருந்து ஒதுங்கும் அலி சப்ரி

கொழும்பு, செப். 24

இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றி ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தனது அரசியல் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வரவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக ஊடகப் பதிவில் அவர் தெரிவித்துள்ளதாவது-

பொதுச்சேவையை நிறைவு செய்யும் இவ்வேளையில் எனது முயற்சிகளை ஆதரித்த, வழிகாட்டிய மற்றும் ஆக்கபூர்வமாக விமர்சித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

உங்கள் நம்பிக்கையும், ஊக்கமும் தான் இந்த பயணம் முழுவதும் என்னை தாங்கிய தூண்கள்.

2019ஆம் ஆண்டு நான் அரசியலில் காலடி எடுத்துவைத்த போது எனது நாட்டுக்கு சேவைசெய்ய குறிப்பாக நீதியமைச்சை சீர்செய்வதில், எனது வாழ்நாளின் பெரும்பகுதியை நான் அர்ப்பணித்த துறை யில், ஒரு தெளிவான பார்வையால் உந்தப்பட்டேன்.

நாங்கள் பயணிக்கப்போகும் பாதை எதிர்பாராதவிதமாக கரமுரடானதாக மாறுகின்றது.

உலகமும் நாடும் விரைவில் அசாதாரண சவால்களின் பிடியில் சிக்கின.

கொவிட் 19 பெருந்தொற்றும், அதன் பின்னர் உக்ரைனில் வெடித்த போரும்,அதன் தீவிரமான நீண்ட விளைவுகளும், சர்வதேச ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தின. இது எங்கள் நாட்டின் வரலாற்றில் மிக மோசமான நெருக்கடிக்கு வழிவகுத்தது. நாம் நினைத்து பார்க்க முடியாத வகையில் எங்களின் மீள் எழும் திறனை சோதனை செய்தது.

இந்த கடினமான காலங்களில் எனக்கு பல பதவிகளில் சேவையாற்றுவதற்கான கௌரவம் கிடைத்தது. நீதியமைச்சராக, நிதியமைச்சராக இறுதியாக வெளிவிவகார அமைச்சராக ஒவ்வொரு பதவியும் அவற்றுக்கே உரிய சவால்களுடன் வந்தன.

என் மீது வைக்கப்பட்ட நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கு நான் என்னால் முடிந்தளவுக்கு சிறப்பாக செயற்பட்டேன்.

வெளிவிவகார அமைச்சராக உலகளாவிய ரீதியில் தலைவர்கள், இராஜதந்திரிகள், சர்வதேச அமைப்புகளின் தலைவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியை நோக்கி நகர்வதற்கான முயற்சிகளின்போது அவர்களின் தளர்ச்சியற்ற ஆதரவும்,இணைந்த செயற்பாடுகளும் எங்களிற்கு அளவிடமுடியாத பெறுமதி உடையவையாக காணப்பட்டன.

எங்களின் இருள்மயமான தருணங்களில் வெளிப்படுத்தப்பட்ட நன்றிக்காக நான் ஆழமான நன்றியுடையவனாகயிருக்கின்றேன்.

பொதுச்சேவை என்பது எப்போதும் இலகுவான பாதையில்லை. அதற்கு நேரமும் சக்தியும் மாத்திரமல்ல ஆழமான தியாகமும் அர்ப்பணிப்பும் அவசியம்.

ஒருவன் நேர்மையுடன் சேவையாற்ற முயலும்போது ,அந்த தியாகங்கள் இன்னமும் பெரிய விடயங்களாக உணரப்படும்.

ஆனால் நான் எனது பயணத்தை பற்றி சிந்திக்கும் போது, எங்கள் தேசத்தின் சவாலான தருணங்களில் என்னால் வழங்கப்பட்ட பங்களிப்பு குறித்து ( அது எவ்வளவு சிறியதாக காணப்பட்டாலும்) நான் பெருமிதம் கொள்கின்றேன்.

அரசியலில் ஈடுபடுவது என்பது எனக்கு இயல்பாக கிடைத்த ஒருபாதையில்லை.

எதிர்பார்த்த எதிர்பாராத பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி யிருந்தது.

ஆனால் இவற்றின் போது பல வருடங்களுக்கு முன்னர் எனது தந்தை வழங்கிய ஆலோசனையை நான் இறுக்கமாக பின்பற்றினேன்.“உங்களால் கட்டுப்படுத்த முடிந்தவற்றை கட்டுப்படுத்துங்கள், கட்டுப்படுத்த முடியாதவை குறித்து நேரத்தை வீணடிக்கவேண்டாம்” இந்த வார்த்தைகள் எப்போதும் எனக்கு வழிகாட்டியுள்ளன,பாதை எதுவென்பது தெரியாத தருணங்களிலும் முன்னோக்கி இந்த வார்த்தைகள் எனக்கு உதவியுள்ளன.

தற்போது அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகும் இந்த தருணத்தில் எனது முதல் ஆர்வமான சட்ட துறையில் மீண்டும் ஈடுபடுவது குறித்து எதிர்பார்த்துள்ளேன்.-என்றுள்ளது. (அ)

# யானையில் ஏறும் ரணில்!

கொழும்பு, செப். 24

பொதுத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடத் தயாராக இருக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் நிர்வாகக் குழுவுக்கு நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வேட்புமனுத் தயாரிக்கும்



போது புதிதாக ஐந்து பேருக்கு வாய்ப்பு வழங்குமாறும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

# சதொச தலைவர் இராஜினாமா!

கொழும்பு, செப். 24

லங்கா சதொசவின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்தன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து அவர் தனது பதவி விலகலை உறுதிப்படுத்தியுள்ளார்.

புதிய ஜனாதிபதிக்கு தலைவர் ஒருவரை நியமிக்கும் வாய்ப்பை வழங்கி அவர் பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான 40 பேர்!

கொழும்பு, செப். 24

மஸ்கெலியா, புரவுன்சீக் தோட்ட புரவுன்சீக் பிரிவில் தேயிலை கொழுந்து கொய்து கொண்டிருந்த 40 தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

நேற்று காலைவேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 40 பெண்களில் 37 பேர் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பிய தாகவும் மூன்று பெண்கள் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். (அ)

# பஸ் நிலையங்களில் மிக நீண்ட வரிசை!

கொழும்பு, செப். 24

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காகச் சொந்த இடங்களுக்குச் சென்றுள்ள பொது மக்கள் மீண்டும் கொழும்புக்குத் திரும்புவதற்குப் போதியளவு பஸ்கள் இல்லை என பயணிகள் குற்றம் சுமத்துகின்றனர். ஹற்றன் உட்பட நாடளாவிய ரீதியிலுள்ள பல பஸ் நிலையங்களில் பயணிகள் நீண்ட வரிசையில் நிற்பதாக தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளரிடம் வினவியபோது, இதன் போது இன்று (நேற்று) பிற்பகலுக்குள் அதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, தனியார் பஸ்கள் இன்று முதல் வழமை போன்று இயங்கும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லசந்தவின் படுகொலைக்கு அநுர நீதி வழங்கவேண்டும்

## மகள் அஹிம்சா வேண்டுகோள்

கொழும்பு, செப். 24

**சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரம துங்கவின் படுகொலைக்கு, புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நீதி வழங்க வேண்டும் என, லசந்த விக்ரம துங்கவின் மகள் அஹிம்சா விக்கிரமதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எதிராக உண்மையை பேசியமைக்காக, நியாயமற்ற விதத்தில் பறிக்கப்பட்ட எனது தந்தையின் உயிருக்காக, நீதியை பெற்றுக்கொள்வது குறித்து, நானும் எனது குடும்பமும் உறுதியாக உள்ளோம்.

அதிகாரத்தின் முன்னால் உண்மைய பேசியமைக்காக, 15 வருடங்களுக்கு முன்னர், நியாய மற்ற விதத்தில் பறிக்கப்பட்ட எங்களின் தந்தைக்கு, நீதியை பெற்றுக்கொள்வது குறித்து, நானும் எனது குடும்பமும் தளராத உறுதியுடன் காணப்படுகின்றோம். என லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க குறிப்பிட்டுள்ளார். (அ)

# புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு ஒத்துழைப்பு வழங்க நாங்கள் தயார்!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, செப். 24

புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு ஒத்துழைப்பு வழங்க தாம் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் ஆணைக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். அந்த வகையில் புதிய ஜனாதிபதிக்கு எம்முடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர்களின் கூறியுள்ள விடயங்களை நடைமுறைப் படுத்தப்படவேண்டும். அதுவே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது. எம்முடை கொள்கைக்கு ஒத்த விடயங்களுக்கு நாம் ஆதரவு வழங்கு வோம் எதிர்வரும் அனைத்து தேர்தல்களையும் எதிர்கொள்ள நாம் தயாராகவுள்ளோம். அதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். பலமான முறையில் முன்னோக்கி பயணிக்க நாம் தயாராகவுள்ளோம். பாரம்பரிய அரசியலுக்கு அப்பால் சென்று மக்கள் ஆணையொன்று வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் அனைவருக்கும் தாக்கம் செலுத்தும். எந்த சந்தர்ப்பத்திலும் எம்முடைய கொள்கைகளை கைவிடப் போவதில்லை - என்றார். (அ)



# 4 பேர் கொண்ட அமைச்சரவை!

கொழும்பு, செப். 24

புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நான்கு பேர் கொண்ட அமைச்சரவையை நியமிக்கவுள்ளதாகவும் அது விரைவில் நியமிக்கப் படும் எனவும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமர சூரிய நேற்று தெரிவித்தார்.

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் உரையாற்றிய திருமதி ஹரிணி அமரசூரிய இதனைத் தெரி வித்தார்.

இந்த நியமனங்கள் இன்று (நேற்று) நடைபெறாது என தெரிவித்த ஹரிணி அமரசூரிய, பிரதமர் நியமனம் எதிர்காலத்திலும் நிகழும் எனவும் தெரி வித்தார். (அ)

# 5 வருடங்களில் நாமலை ஜனாதிபதியாக்குவோம்!

## திஸ்ஸ குட்டியாராச்சி திட்டவட்டம்

கொழும்பு, செப். 24

எதிர்வரும் ஐந்து வருடங்களில் நிச்சயம் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கப்போவதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பொது ஜன பெரமுனவின் தலைமைத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தோல்வியடைந்துள்ளதாக நாம் எண்ணவில்லை. அரசியல் என்றால் இவ்வாறாகவே அமையும். புதிய ஜனாதிபதிக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இருப்பினும் நான் அநுரவுக்கு வாக்களிக்க வில்லை. நான் நாமல் ராஜபக்ஷவுக்கே வாக்களித்தேன். இளைஞரான அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியானால் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியுமாக இருக்கும் என்பது என்னுடைய நிலைப்பாடாகவுள்ளது.

பெரும்பாண்மை மக்களின்



ஆதரவு அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அந்த நாட்டு மக்களின் நன்மைக்காக முன்னெடுக்கப் படும் வேலைத்திட்டங்களுக்கு நாம் ஒத்துழைப்பை வழங்க தயாராகவுள்ளோம். பல உறுதிமொழிகளை அநுர வழங்கியுள்ளார்.

எம்முடைய நாடு சிங்கப்பூர் ஆக மாறுவதற்கு நாம் எதிர்ப்பை வெளியிடப்போவதில்லை. எம்மால் மீண்டும் அரசியல் செய்ய முடியும். பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் நிச்சயம் பொது தேர்தலில் போட்டியிடுவோம். எதிர்வரும் 5 வருடங்களில் நாம் நிச்சயம் தலைவரை உருவாக்குவோம். அந்த வகையில் நாமல் ராஜபக்வை ஜனதிபதியாக்கும் திட்டத்தை முன்னெடுப்போம் - என்றார். (அ)

# அநுரவுக்கு ராகுல் காந்தி வாழ்த்து

கொழும்பு, செப். 24

இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கு காங்கிரஸின் மூத்த தலைவரும் மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்திலேயே அவர் இந்த வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

குறித்த வாழ்த்து செய்தியில்-

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்க அவர்களுக்கு வாழ்த்துக்கள் எனவும் பரஸ்பர வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக நமது நாடுகள் தொடர்ந்து இணைந்து செயல் படும் - என அவர் பதிவிட்டுள்ளார். (அ)

# இலங்கையில் நடந்த அரசியல் பூகம்பம்!

## வாழ்த்துச் செய்தியில் எரிக் சொல்ஹெய்ம்



கொழும்பு, செப். 24

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின்போது தாழ்த்தப்பட்ட இலங்கையர்கள் அனுபவித்த வலிக்கு தேர்தல் முடிவு ஒரு சாட்சி என ஜனாதிபதியின் சர்வதேச கால நிலை ஆலோசகரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்து தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவிலேயே இவ்வாறு குறிப்பிட்டப்பட்டுள்ளார்.

அந்த வாழ்த்து செய்தியில்-

இலங்கை மக்கள் பாரம்பரிய உயரடுக்கிற்கு வெளியே இருந்து ஒரு கட்சியையும் வேட்பாளரையும் தெரிவு செய்வது இதுவே முதல் தடவையாகும். திஸாநாயக்க அல்லது ஏ.கே.டி என அன்புடன் அழைக்கப் படும் அநுராதபுரம் மாவட்டத்தில் மிகவும் தாழ்மையான வளர்ப்பில் இருந்து வந்தவர். அவரது கட்சியோ அல்லது கூட்டணியோ கடந்த காலத்தில் ஆட்சிக்கு அருகில் இருந்ததில்லை.

பொருளாதார நெருக்கடியின்போது தாழ்த்தப்பட்ட இலங்கையர்கள் அனுபவித்த வலிக்கு இந்த முடிவு ஒரு சாட்சி. ஊழலுக்கு எதிரான ஏ.கே.டி.க்கள் மற்றும் மக்கள் நலனுக்கான அவரது அழைப்புக்கு பரவலான அனுதாபம் உள்ளது.

தேர்தல் வெற்றியாளரின் பலவீனம் என்னவென்றால், அவரது கூட்டணிக்கு இலங்கை போன்ற சிக்கலான அரசை நடத்திய அனுபவம் மிகக் குறைவு. மிகவும் சவாலான பொருளாதாரச் சூழலில் தங்களின் பல வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தவும் போராடுவார்கள். அவர்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை அடையப் போராடலாம்.

இந்த தேர்தல் பல வெளிநாட்டு தலைநகரங்களில் புருவங்களை உயர்த்துவது உறுதி. இராஜதந்திரிகள் இருமுறை யோசிக்க வேண்டும்.

பல மேற்கத்திய நாடுகள் தேர்தலின் அமைதியான தன்மையிலிருந்தும், தோல்வியடைந்த முக்கிய வேட்பாளர்களான சஜித் பிரேமதாச மற்றும் ரணில் விக்கிரமசிங்க வெற்றியாளரிடம் காட்டிய கருணையிலிருந்தும் பாடம் கற்க முடியும்.- என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# விருப்பு வாக்குகள் தொடர்பில் வாக்காளரிடம் தெளிவில்லை!

கொழும்பு, செப். 24

விருப்பு வாக்களிப்பு செயன்முறை தொடர்பில் வாக்காளர்கள் மத்தியில் போதிய தெளிவின்மை காணப்பட்டதாகவும் இதுகுறித்து எதிர்வரும் தேர்தல்களில் விழிப்புணர்வூட்டப்பட வேண்டும் என்றும் பொது நலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

பிரசார நடவடிக்கைகளின் போது அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப் பட்டமை தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் பொது நலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் விசேட தேவையுடைய வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏற்றவாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் பாராட்டுக்குரியவை யென பொதுநலவாய தேர்தல் கண்காணிப்புக்குழு தெரிவித் துள்ளது. (அ)

# வாக்கு எண்ணும் மையத்தில் குழப்பம் செய்த இருவர் கைது

கொழும்பு, செப். 24

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெண்ணும் மையமாக அமைக்கப்பட்டிருந்த கொழும்பு றோயல் கல்லூரியின் மத்தியில் வாக்குவாதம் முற்றி பெண்ணொருவரைத் தள்ளிவிட்டு காயப்படுத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தை காலி வீதியைச் சேர்ந்த காயமடைந்த பெண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.

நேற்று முன் தினம் இரண்டாவது முறை விருப்பு வாக்கு எண்ணிக்கையின்போது, அரசியல் கட்சி உறுப்பினர்களுக்கு இடையே வாக்குவாதம் முற்றி குழப்பமான சூழலை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இந்தத் தேர்த்திருவிழாவில் கலந்து கொண்டனர்.



# பாற்சோறு வழங்கி மக்கள் கொண்டாட்டம்

தோப்பூர், செப். 24

அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றதை அடுத்து திருகோணமலை, தோப்பூரில் பாற்சோறு வழங்கி மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்கள் மற்றும் வீதிகளில் பயணித்தவர்களுக்கும், கட்சி ஆதரவாளர்கள் பாற்சோறு வழங்கி மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# காட்டு யானைகள் தொல்லை சுற்றுலாப் பயணிகள் அச்சம்!

பொத்துவில், செப். 24

**அம்பாறை, பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்தில் காட்டு யானைகளின் நடமாட்டம் மற்றும் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் பிரதேசவாசிகளும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் அச்சத்துடன் வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.**



அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் மாலையிலும் இரவு வேளையிலும் மக்களுக்கு தொல்லை கொடுத்து வந்த காட்டு யானைகள் தற்போது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வரும் பொத்துவில் உல்லை மற்றும் அறுகம்குடா பிரதேசங்களில் பகல் வேளையில் சர்வ சாதாரணமாக நடமாட ஆரம்பித்துள்ளன.

கூட்டமாகவும் தனியாகவும் கிராமங்களுக்குள் நுழையும் காட்டு யானைகள் குடியிருப்புகள், மதில்கள் மற்றும் பயன் தரும் தென்னை, வாழை மரங்களுக்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்துகின்றன. (எ)



# கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப வளாகம் திறப்பு

மட்டக்களப்பு, செப். 24

இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வளாகம் மட்டக்களப்பில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த தொழில்நுட்ப வளாகம், கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் முயற்சியில், த கேற் நிறுவன அனுசரணையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வளாக திறப்பு விழாவில், இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பி. உடவத்த பிரதம விருந்தினராகவும், உபவேந்தர் மற்றும் பணிப்பாளர்களுக்கான குழுவின் தலைவரும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக உபவேந்தருமான பேராசிரியர் சஞ்ஜீவனி கினிகத்தர மற்றும் இலங்கை வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இத் தொழில்நுட்ப வளாகம் தொழில் முயற்சியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் வருமானத்தை நிலைபேறானதாக மேம்படுத்தும் ஒரு காப்பகமாகவும் செயல்படவுள்ளது. (எ)

# கிண்ணியாவில் கேக் வெட்டி கொண்டாட்டம்

கிண்ணியா, செப். 24

அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றதை அடுத்து திருகோணமலை, கிண்ணியாவில் மக்கள் கேக் வெட்டி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை கிண்ணியா புஹாரியடி சந்தியில் பொதுமக்கள், கட்சி ஆதரவாளர்களால் இவ்வாறு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. (எ)







# ஜனாதிபதி அநுரவுக்கு ஆசி வேண்டி கல்முனையில் விசேட பூஜை வழிபாடு

கல்முனை, செப். 24

புதிய ஜனாதிபதியாக நேற்றுப் பதவியேற்ற அநுரகுமார திஸநாயக்கவுக்கு ஆசி வேண்டி கல்முனை தொகுதி தேசிய மக்கள் சக்தி செயல்பாட்டாளர்களின் ஏற்பாட்டில் விசேட பூஜை வழிபாடுகள் கல்முனை சிறீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றன.

புதிய ஜனாதிபதி அநுர குமார தலைமையில் மக்களுக்கான இன மத பேதமற்ற ஆட்சி சிறப்பாக நடைபெற ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இவ் வழிபாட்டில் தேசிய சமாதான அபிவிருத்தி மையத்தின் தலைவர் வி. ரி. சம்பந்தர் தலைமையில் தேசிய மக்கள் சக்தி செயல்பாட்டாளர்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினர், புத்திஜீவிகள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்குபற்றினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சுரங்கத்தில் வெடி விபத்து: 50 பேர் பலி; 20 பேர் காயம்

## ஈரானில் பெரும் சோகம்



தெஹ்ரான், செப். 24

ஈரானின் தெற்கு கொராசன் பிராந்தியத்தில் உள்ள சுரங்கத்தில் எரிவாயு வெடித்து நடந்த விபத்தில் 50 பேர் உயி ரிழந்தனர், 20 பேர் காயமடைந்தனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்து நடந்த பகுதியில் இயங்கி வரும் மாதன்ஜோ நிறுவனத்தால் நடத்தப்படும் சுரங்கத்தில் மீதேன் வாயு வெடித்ததால் இந்த விபத்து ஏற்பட்டது என்று ஊடகங்கள் தெரிவித்தன. (எ)



# இந்திய கலைப்பொக்கிஷங்களை திருப்பிக் கொடுத்தது அமெரிக்கா

வாஷிங்டன், செப். 24

இந்தியாவில் இருந்து ஏராளமான கலைப்பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. சுவாமி சிலைகள் உட்பட ஏராளமான அரிய பொருட்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட இந்திய கலைப்பொருட்களை மீட்பதில் பிரதமர் நரேந்திர மோடி தீவிர கவனம் செலுத்தினார். இந்த நிலையில், அமெரிக்காவுக்கு தற்போது பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, இந்தியாவின் அரிய கலைப் பொருட்கள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளார். இதையடுத்து, இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட 297 அரிய கலைப் பொருட்களை அமெரிக்க அரசு மீண்டும் ஒப்படைத்துள்ளது. இவற்றையும் சேர்த்து கடந்த 2014ஆம் ஆண்டு முதல் இதுவரை மொத்தம் 640 இந்திய கலைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் அமெரிக்காவில் இருந்து மட்டும் 578 கலைப் பொருட்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

கடந்த 2021ஆம் ஆண்டு பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்ட போது, 157 இந்திய கலைப் பொருட்களை அமெரிக்க அரசு ஒப்படைத்தது. அவற்றில் 12ஆம் நூற்றாண்டை சேர்ந்த நடராஜர் சிலையும் அடங்கும். அதேபோல் கடந்த 2023ஆம் ஆண்டு 105 அரிய கலைப் பொருட்களை இந்தியாவிடம் அமெரிக்க அரசு ஒப்படைத்தது. இதேபோல் பிரிட்டனில் இருந்து 16, அவுஸ்திரேலியாவில் இருந்து 40 அரிய கலைப் பொருட்கள் மீட்டு வரப்பட்டன. (எ)

# ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராக அமெ. ஆதரவு

வாஷிங்டன், செப். 24

ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராக இணைய அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்று பிரதமர் நரேந்திர மோடியிடம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதியளித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை இந்தியப் பிரதமர் மோடி, வில்மிங்டன் நகரில் சந்தித்து பேசினார். இதன்போதே ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராக ஜனாதிபதி ஜோ பைடன் முழு ஆதரவு தெரிவித்தார். (எ)



# ஐஸ்லாந்தில் துருவக் கரடியை சுட்டுக் கொன்ற பொலிஸார்

ரெய்க்யவிக், செப். 24

ஐரோப்பிய கண்டத்தில் உள்ள தீவு தேசமான ஐஸ்லாந்து நாட்டில் சுமார் 8 ஆண்டுகளுக்குப் பிறகு தென்பட்ட துருவக் கரடியை பொலிஸார் சுட்டுக் கொன்றனர். மக்களை அச்சுறுத்தியதால் இந்தக் கரடி சுட்டுக்கொல்லப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

“பொதுவாக நாங்கள் இப்படி செய்வதில்லை. அதில் எங்களுக்கு விருப்பமும் இல்லை. அந்த பகுதியில் தனியாக இருந்த வயதான பெண் ஒருவரை துருவக் கரடி அச்சுறுத்தியது. அதையடுத்து அவர் வீட்டின் மேல் பகுதிக்குச் சென்று பூட்டிக் கொண்டுள்ளார். பின்னர் தொலைபேசி மூலம் விவரத்தை தன் மகளிடம் தெரிவித்துள்ளார். உதவியும் நாடியுள்ளார். அதன் பிறகு இப்படி செய்ய வேண்டியிருந்தது” என பொலிஸ் அதிகாரி



ஹெல்கி ஜென்சன் தெரிவித்தார்.

துருவக் கரடிகள் ஐஸ்லாந்தில் அதிகம் தென்படுவதில்லை. கிரீன்லாந்தில் இருந்து பனிப் பாறைகள் அடித்து வரப்படும் போது துருவக் கரடிகளும் வருவதுண்டு. 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐஸ்லாந்தில் முதல் முறையாக இப்போது தான் துருவக் கரடி தென்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ)

# லெபனானை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கப் பிரஜைகளுக்கு உத்தரவு

பெய்ரூட், செப். 24

இஸ்ரேல் - ஹிஸ்புல்லா இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில், லெபனானை விட்டு வெளியேற தனது நாட்டு மக்களுக்கு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹஸன் நசரல்லாவின் வலதுகரமாக செயல்பட்ட புவத் ஷூக்கர் கொல்லப்பட்டதை தொடர்ந்து லெபனான் நாட்டுக்கான பயண கட்டுப்பாடுகளை அமெரிக்கா அறிவித்திருந்தது.

இந்த நிலையில், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் சிறப்பு அதிரடிப் படையான ‘ரத்வான்’ படையின் தளபதி இப்ராஹிம் அக்கீல் மற்றும் அஹமது வாபி ஆகியோர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இருதரப்புக்கும் இடையே மீண்டும் மோதல் வெடித்துள்ளது. இந்த நிலையில்தான், தனது நாட்டு குடிமக்களை லெபனான் நாட்டிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது. விமானப் போக்குவரத்து சேவை இன்னும் அமுலில் உள்ள நிலையில் அதனைப் பயன்படுத்தி உடனடியாக லெபனானை விட்டு வெளியேறுமாறு அமெரிக்கா தனது நாட்டு பிரஜைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (எ)

# ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து குவாட் தலைவர்கள் கவலை

டெலாவர், செப். 24

ரஷ்யா - உக்ரைன் இடையே நடந்து வரும் போரும், காஸா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலும் மிகவும் கவலையளிப்பதாக அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நான்கு நாடுகளின் கூட்டமைப்பான குவாட்டின் உச்சி மாநாடு அமெரிக்காவின் வில்மிங்டன் நகரில் நடைபெற்றது. இதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி அல்பனீஸ், ஜப்பான் பிரதமர் கிஷிடா பியூமியோ ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர், காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல், இந்தோ - பசுபிக் கடல் பிராந்திய பாதுகாப்பு, உலக சுகாதார பாதுகாப்பு, தொற்றுநோய் தயார்நிலை, தரமான உட்கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து நான்கு நாட்டு



தலைவர்களும் வெளியிட்ட கூட்டறிக்கையில், “உக்ரைனில் நடைபெற்று வரும் போர் காரணமாக, பயங்கரமான மற்றும் துயரமான மனிதாபிமான நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் நாங்கள் எங்களின் ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்கிறோம். அனைத்து நாடுகளும், பிற நாடுகளின் பிராந்திய ஒருமைப்பாடு, இறையாண்மை அல்லது சுதந்திரத்துக்கு எதிரான அச்சுறுத்தல்களை தவிர்க்க வேண்டும். இந்தப் போரின் சூழலில் அணு ஆயுதங்களை பயன்படுத்துவது அல்லது அச்சுறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# ஹில்சா மீன் ஏற்றுமதிக்கான தடையை நீக்கிய பங்களாதேஷ்

டாக்கா, செப். 24

துர்க்கா பூஜை பண்டிகை நெருங்கி வரும் நிலையில், இந்தியாவுக்கு விதிக்கப்பட்டிருந்த ஹில்சா மீன் ஏற்றுமதி தடையை பங்களாதேஷ் அரசு நீக்கியுள்ளது. இதன்படி, மூவாயிரம் தொன் ஹில்சா மீன்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் செப்ரெம்பர் - ஒக்ரோபர் மாதத்தில் துர்க்கா பூஜை கொண்டாடப்படுகிறது. துர்க்கா பூஜை கொண்டாட்டங்களின்போது, ஹில்சா மீன்கள் அதிகம் நுகரப்படுகின்றன. இந்த மீன்கள் பங்களாதேஷில் இருந்து அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

சில வாரங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு ஹில்சா மீன்களை ஏற்றுமதி செய்ய பங்களாதேஷ் அரசு தடைவிதித்தது. இந்த நிலையில், தற்போது அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விரும்பிய மாற்றத்தை புதிய ஜனாதிபதி தரவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 24

**புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, நாட்டு மக்கள் விரும்பிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என, ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலி யுறுத்தியுள்ளார்.**

மாற்றம் ஒன்று நிகழ வேண டும் என்ற எதிர்பார்ப்போடு, மக்கள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த நிலையில், மக்க ளின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப் பட வேண்டும் எனவும், அதற்கான நடவடிக்கைகளை, புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியு றுத்தியுள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

சமத்துவமான தேசத்தை உருவாக்கும் கனவோடு ஆட்சி அமைத்திருக்கும், தேசிய மக் கள் சக்தியின் தலைவர் ஜனா திபதி அநுர குமார திசா நாயக்க, அனைத்து மக்களின தும் கனவுகளை ஈடேற்றுவார் என்பதையும் எதிர்பார்க்கி றோம் எனவும் டக்ளஸ் தேவா னந்தா கூறியுள்ளார். (அ)



# அநுர பதவியேற்றதை தொடர்ந்து யாழில் வெற்றிக் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், செப். 24

நாட்டின் புதிய ஜனாதிபதி யாக அநுரகுமார திசாநாயக்க பதவியேற்றுள்ளதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வெற்றிக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நேற்று காலை பொங்கல் பொங்கி ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் வெற்றியை ஆதரவாளர்கள் கொண்டாடினர்கள்.

நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் அரியாலை அமைப் பாளர், தேசிய மக்கள் சக்தி யாழ்.மாவட்ட உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# அநுரகுமார திஸநாயக்கவுக்கு சர்வதேசத் தலைவர்கள் வாழ்த்து!

கொழும்பு, செப். 24

இலங்கை புதிய ஜனாதிபதி யாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸநாயக்கவுக்கு அமெரிக்கா வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங் எக்ஸ் கணக்கில், இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான பங்கா ளித்துவத்தைப் பாராட்டுவதா கக் கூறினார். மேலும், பொது வான முன்னுரிமைகளில் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்தார்.

இதேவேளை, மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்சு வும் அநுரகுமார திஸநாயக்க வுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

நெருங்கிய அண்டை நாடான மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று நட்புறவை வலுப் படுத்த இணைந்து செயற்படத் தயார் என்னும் சுட்டிக்காட்டி னார்.

இதேவேளை, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பும் தனது வாழ்த்துக்களை தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் வெற் றிக்கு பாகிஸ்தான் பிரதமர் தனது மனமார்ந்த வாழ்த்து களை தெரிவிப்பதாக எக்ஸ் கணக்கில் இது தொடர்பில் பதிவிட்ட எக்ஸ் குறிப்பில் கூறி யிருந்தார். (அ)

# தலைமன்னார் கடற்பகுதியில் 1,318 கிலோ பீடி இலைகள் மீட்பு

மன்னார், செப். 24

மன்னார் மற்றும் தலை மன் னார் கடற்பகுதியில் ஆயிரத்து 318 கிலோகிராம் நிறையுடைய பீடி இலைகள் கடற்படையின ரால் மீட்கப்பட்டுள்ளன.

வழமையான ரோந்து நடவ டிக்கையின்போது பீடி இலை கள் மீட்கப்பட்டுள்ளதாக கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

தலைமன்னார் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது 1050 கிலோகிராம் நிறையுடைய பீடி இலைகள் 16 பொதிகளில் மீட் கப்பட்டுள்ளதாக கடற்படை குறிப்பிட்டுள்ளது.

அதேபோன்று மன்னாரில் நேற்றுமுன்தினம் முன்னெடுக் கப்பட்ட தேடுதலில் 266 கிரோகிராம் நிறையுடைய பீடி இலைகள் கடலில் மிதந்து வந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கை களுக்காக உரிய அதிகாரிகளி டம் கையளிக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள் ளனர். (அ)

# ஆளுநர்கள் மூவர் இராஜினாமா!

கொழும்பு, செப். 24

வடமத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களின் ஆளுநர் கள் தங்களது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

நாட்டின் 9ஆவது நிறை வேற்று அதிகாரமுடைய ஜனா திபதியாக அநுர குமார திஸா நாயக்க தெரிவு செய்யப்பட் டதை அடுத்து தொடர்ந்து அமைச்சர்கள் உள்ளிட்ட பலர் பதவி விலகுவதான அறிவிப்புக் கள் வெளிவருகின்றன.

இந்த நிலையில் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் மற்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸா நாயக்க, ஊவா மாகாண ஆளு நர் அநுர விதானகே ஆகியோர் தமது ஆளுநர் பதவிகளில் இருந்து விலகுவதாக அறிவித் துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன் தினம் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாபா அபேவர்த் தனவும் ஆளுநர் பதவியில் இருந்து விலகியுள்ளார். (அ)

# புதிய ஜனாதிபதி அநுர பதவியேற்பு; மன்னாரில் வெற்றிக் கொண்டாட்டம்

மன்னார், செப். 24

நாட்டின் 9ஆவது நிறை வேற்று அதிகாரமிக்க ஜனாதி பதியாக அநுரகுமார திசா நாயக்க பதவியேற்றதைத் தொடர்ந்து மன்னாரில் வெற் றிக் கொண்டாட்ட நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் பஜார் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட கிளையி னால் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட் டது.

இதன்போது பொங்கல் பொங்கி நிகழ்வு இடம்பெற்ற தாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் ஆதரவா ளர்கள் மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# புதிய ஜனாதிபதிக்கு சுகு சிறிதரன் வாழ்த்து

யாழ்ப்பாணம், செப். 24

தோழர் அனுர குமார திச நாயக்க நாட்டின் தலைவராக பதவியேற்றுள்ள இந்த சரித்திர தருணத்தில் எம் மனம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக அரசியல், சமூக செயற்பாட்டாளரான சுகு சிறி தரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் வானில் சுதந்திரம் பெற்றதாக கூறப்படும் 76 வருடங்களில் கண்டிராத சரித்திர மாற்றம் நிகழ்ந்துள்ளதாகவும்

இந்த மாற்றத்திற்கான நெடும் பயணத்தில் மக்கள் விடு தலை முன்னணி தேசிய மக்கள் சக்தியாக பரிணமித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"பாழ் பட்டு வறுமை மிஞ் சிப்" போன இந்த நாட்டின் மக்களின் வாழ்வில் ஒளி ஏற்ற வும் அனைத்து இன மத சமூ கங்களிடையே ஜனநாயக பூர்வ மான நல்லுறவை ஏற்படுத்தவும் தம்மாலான அனைத்து பங்க ளிப்புகளையும் வழங்குவோம் எனவும் சுகு சிறிதரன் தமது அறிக்கையில் தெரிவித்துள் ளார்.

# அநுரவுக்கு பாராளுமன்றில் முழு ஆதரவு வழங்கப்படும்!

## இராதாகிருஸ்ணன் அறிவிப்பு

கொழும்பு, செப். 24

"நாட்டு மக்களின் வாக்கு களால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு மலையக மக்கள் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி யடைகின்றேன்." - என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலை வரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மக்கள் நலன் சார்ந்த விட யங்களுக்காக பாராளுமன்றத் தில் கொண்டுவரப்படுகின்ற சட்டங்களை நிறைவேற்றுவ தற்கு நாம் முழுமையான ஒத்து ழைப்பை தருவதற்கு தயாராக இருக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்-

தேர்தல் நிறைவடைந்து மக் களின் பெரும்பான்மை வாக்கு களால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அனைத்து மக்களையும் ஒன்றி ணைத்து இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கும் இந்த நாட்டு மக்களின் பாரிய எதிர் பார்ப்பையும் அவர்களுடைய எதிர்காலத்தை சுபீட்சமாக அமைப்பதற்கும் தாங்கள் அர்ப் பணிப்புடன் செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக் கின்றது.

தேர்தலின் பின்பு அனைத்து நாட்டு மக்களையும் கடந்த கால ஜனாதிபதிகளைப்போல இன மத மொழி ரீதியாக பாகு படுத்தாமல் அனைவரையும் ஒரு தாயின் பிள்ளைகளாக நினைத் துச் செயற்படுகின்ற திறமை உங்களிடம் இருக்கின்றது என் பதை நாம் அறிவோம்.

உங்களுடைய தலைமைத்து வத்தை உன்னிப்பாக கவனித் தமை காரணமாகவும் தாங்கள் அனைவரையும் அரவணைக் கின்ற அந்த உயரிய நிலைமை, மிகவும் எளிமையாக நடந்து கொள்கின்ற தன்மை போன் றவை காரணமாக நாம் 2017 ஆண்டு மலையக மக்கள் முன் னணி நடத்திய இளைஞர் மாநாட்டுக்கு உங்களை சிறப்பு விருந்தினராக அழைத்திருந் தோம்.

இந்த நாட்டு மக்களின் நிலைமையை தாங்கள் நன்கு அறிவீர்கள். ஏனெனில் சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்து இன்று இந்த நாட்டின் உயர் பதவியை அடைந்திருக் கின்றீர்கள். எனவே நடுத்தர மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் முன் னின்று செயற்படுவீர்கள்.

இந்த நாட்டின் கிராமப்புற பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெ ழுப்புவதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையும் எமக்கு இருக்கின்றது.

பாராளுமன்ற சம்பிரதாயங் களை மதித்து அனைவருக்கும் ஒரே சட்டம் என்ற நிலையில் நீங்கள் செயற்படுவீர்கள். அதற் கான ஒரு நிலைமையை ஏற் படுத்தும் பொழுதும் மக்கள் நலன் சார்ந்த விடயங்களுக்காக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படுகின்ற சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நாம் முழுமையான ஒத்துழைப்பை தருவதற்கு தயாராக இருக்கின் றோம் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின் றேன்." - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்...

கொழும்பில் அவர் நேற்று நடத் திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், "இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு நாங்கள் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம்.

"தென்னிலங்கை மக்கள் எவ்வாறு கடந்தகால அரசியல் தலைமைகளை புறந்தள்ளி மாற்றத்தை விரும்பினார்களோ அதையே தமிழ்த் தேசமும் விரும்புகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒற்றையாட்சி முறையை தவிர்த்து சமஷ்டியை முன்னிறுத்தும் ஆட்சியையே நங்கள் எதிர்பார்க்கின்றோம்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில், வடக்கு மக்கள் இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்வைத்த நிலைப்பாட்டுக்கு ஆதரவளித்திருந்தாலும் ஒப்பீட்டளவில் தமிழ மக்கள் பொதுவேட்பாளருக்கு அளித்த ஆதரவு மூலம் தமிழ்த் தேசியத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர் - என்றார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புறக்கணிக்குமாறு அழைப்பு விடுத்திருந்ததுடன் பிரசாரங்களிலும் ஈடுபடடமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அநுரகுமார...

சக்தியின் உயர் பீட உறுப்பினர்கள், சர்வ மதத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (ஐ)

## புதிய...

மக்களின் சார்பிலும், வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்

இலங்கையும் சீனாவும் பாரம்பரிய நட்பு அயல்நாடுகள்.

இரு நாடுகளும் இராஜதந்திர உறவை ஏற்படுத்தி, 67 வருடங்களாகின்ற நிலையில், இரு நாடுகளும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வையும், ஆதரவையும் வழங்கி வருகின்றன.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மிக்க சகவாழ்வு, நாடுகளுக்கு இடையிலான, பரஸ்பரம் நன்மையளிக்கக்கூடிய விடயங்கள் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான சிறந்த உதாரணங்கள் ஆகும். நான், இலங்கை-சீன உறவுகளுக்கு பெரும் முக்கியத்துவத்தை வழங்குகின் றேன்.

உங்களுடன் பாரம்பரிய நட்புறவை முன்னெடுப்பதற்கும், பரஸ்பர அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும், புதிய பட்டுப்பாதை திட்டத்தில், வெற்றிகரமான விடயங்களை முன்னெ டுப்பதற்கும் ஆர்வமாக உள்ளேன் - என குறிப்பிட்டுள்ளார். (அ)

# 24 வருடங்களுக்கு பின்னர் நாட்டுக்கு பெண் பிரதமர்?

கொழும்பு, செப். 24



இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க நேற்று பதவிப்பிரமாணம் செய்ததை அடுத்து அமையவுள்ள உத்தேச இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நியமிக்கப்படவுள்ளார்.

பொதுத்தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் அமையும்வரை செயற்படும் இடைக்கால அரசில், 4 பேர் கொண்ட உறுப்பினர்கள் 15 அமைச்சுகளை பகிர்ந்துகொள்ளவுள்ளனர் என அறிய முடிகின்றது.

இலங்கை அரசியல் வரலாற்றில் இதற்கு முன்னர் இரு பெண்கள் மாத்திரமே பிரதமர் பதவியை வகித்துள்ளனர்.

1960 ஜூலை 21 ஆம் திகதி முதல் 1965 மார்ச் 25 ஆம் திகதிவரை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமர் பதவியை வகித்துள்ளார். உலகில் முதல் பெண் பிரதமர் இவரென்பதும் குறிப்பிடத்தக்கது. பிறகு 1970 முதல் 77 வரையும் அவர் பிரதமராக பதவி வகித்தார்.

அதன்பின்னர் 1994 ஒகஸ்ட் 19 ஆம் திகதி முதல் 1994 செப்ரெம்பர் 12 ஆம் திகதிவரை சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமராக பதவி வகித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றி பெற்றதும் தனது தயாரானஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை சந்திரிக்கா பிரதமராக்கினார். 1994 நவம்பர் 14 ஆம் திகதி முதல் 2000 ஒகஸ்ட் 9 ஆம் திகதிவரை அவர் பிரதமராக செயற்பட்டார்.

2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் ரத்ன சிறி விக்ரமநாயக்க, ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ, தி.மு.ஜயரத்ன மற்றும் தினேஷ் குணவர்தன ஆகியோர் பிரதமர் பதவியை வகித்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 2 தசாப்தங்களுக்கு பிறகு இலங்கையில் பெண்ணொருவர் பிரதமராக பதவியேற்கின்றார். (அ)

## நாட்டை கட்டியெழுப்பும்...

வலிமையும் - சட்டங்களின் வலிமை யும் அவசியம் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

"எமது நாட்டில் தேர்தலின் போது ஜனநாயக முறையில் அதிகார மாற்றம் ஏற்பட்ட வரலாறு உள்ளது. எந்தத் தலைவரும் தேர்தலின் போது அதிகார மாற்றத்தை நிராகரித்ததில்லை. இதன்படி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களின் ஆணையை ஏற்றுக் கொண்டதுடன், இந்த ஜனநாயக ரீதியிலான அதிகார பரிமாற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டமைக்காக மிக்க நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

"நாம் மிகவும் சவாலான நாட்டைப் பெறுகிறோம் என்பதை ஆழமாகப் புரிந்து கொண்டுள்ளோம். நமது அரசியல் இன்னும் சுத்தமாக இருக்க வேண்டும், மக்கள் அதிகம் எதிர்பார்க்கும் தூய்மையான அரசியல் கலாசாரம் தேவை. அதற்காக தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறோம்.

"நம் நாட்டின் அரசியல்வாதி மற்றும் அரசியல் பற்றி சாதாரண குடிமகனுக்கு மோசமான எண்ணம் உள்ளது. அது பொருத்தமான இடம் இல்லை என்ற எண்ணம் உள்ளது. எனவே, எங்கள் தரப்பில் இருந்து, அரசியல்வாதி மற்றும் அரசியலுக்கு பொதுமக்களின் மரியாதை மற்றும் நம்பிக்கையை மீண்டும் கொண்டு வர எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய நாங்கள் தயாராக உள்ளோம்.

"நாம் எதிர்கொள்ளும் இந்த ஆழமான நெருக்கடியானது ஓர் அரசாங்கம், ஓர் அரசியல் கட்சி மற்றும் ஒரு தனி நபர் மட்டுமே சமாளிக்கக்கூடிய ஒன்று என்று நாங்கள் நம்பவில்லை. ஏனென் றால் நான் முன்பே கூறியுள்ளேன். நான் மந்திரவாதி அல்ல. நான் இந்த நாட்டில் பிறந்த ஒரு சாதாரண குடிமகன். சாத்தியங்கள் உள்ளன - இயலாமைகள் உள்ளன. தெரிந்து கொள்ள வேண்டிய விசயங்கள் உள்ளன - தெரியாதவைகளும் உள்ளன. ஆனால், எனக்கு தெரிந்ததை சேகரித்து இந்த நாட்டை வழிநடத்த சிறந்த முடிவுகளை எடுப்பதே எனது மிக முக்கியமான பணி. எனவே, அந்த கூட்டுத் தலைமீட்டின் ஒரு பகுதியாக மாறுவது எனது பொறுப்பு. அதற்காக, நான் கூட்டுத் தலைமீட்டின் ஒரு பகுதியாக மாறுகிறேன்.

"இந்த நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவருவதில், அனைத்துத் துறைகளிலும் சாதாரண குடிமக்களுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. அந்தப் பொறுப்பை நிறைவேற்ற அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன். ஆனால், நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் இந்தப் பணியை முன்னின்று நடத்துவதில் எனக்கு முதன்மையான மற்றும் மிக முக்கியமான பொறுப்பு உள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். எனவே, ஒவ்வொரு முறையும் இந்த நாட்டின் குடிமக்களை நடவடிக்கை மூலம் நம்ப வைக்க நான் தயாராக இருக்கிறேன், இந்த சவாலை எதிர்கொள்ளும் வகையில் எனக்கு ஒதுக்கப்பட்ட வேலையை நான் நிறைவேற்றுவேன் என்று இந்த சமுதாயத்தை நம்ப வைக்க நான் தயாராக இருக்கிறேன்.

"குறிப்பாக நமது நாட்டுக்கு சர்வதேச ஆதரவு தேவை என்பதை நாங்கள் அறிவோம். எனவே, உலகில் அதிகாரப் பிரிவினைகளை பொருட்படுத்தாமல் ஒவ்வொரு நாட்டையும் மிகவும் அனுகூலமான முறையில் கையாள்வதே எமது எதிர்பார்ப்பாகும். நாம் உலகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட வேண்டிய நாடு அல்ல. உலகத்துடன் கூட்டாக முன்னேற வேண்டிய நிலை. அதுபற்றி தேவையான முடிவுகளை எடுப்பதில் நாங்கள் சிறிதும் தயங்குவதில்லை. நம் நாட்டைக் கட்டியெழுப்புவதில் தொழிலதிபர்கள் மற்றும் தொழில் முனைவோர்களின் பங்கு அதிகம். எனவே, நமது நாட்டை வலுவாகக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்க செயல்முறை அவர்களுக்கு ஆதரவளிக்கும் மற்றும் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இறுதியாக, நமது நாட்டின் ஜனநாயகம் என்னை நம் நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துள்ளது என்று கூறுகிறேன். அந்தத் தேர்தலுக்காக மக்கள் எனக்கு வாக்களித்துள்ளனர். எனக்கும் கொடுக்கப்படாத வாக்குகள் பல உள்ளன. எனவே, எங்கள் வெற்றியின் கலவை மற்றும் அளவைப் பற்றி நாங்கள் நன்றாகப் புரிந்துகொள்கிறோம். எனவே, எங்களை ஆதரிக்காத மற்றும் எங்களை நம்பாத மக்களுக்கு ஆதரவளிக்கும் மற்றும் நம்பிக்கையை வளர்க்கக்கூடிய ஒரு திட்டத்தைத் தொடங்குவதே எனது நிர்வாகத்தின் போது எனக்கு ஒதுக்கப்பட்ட பணி. அது என்ன செய்ய முடியும் என்பதில் வலுவான நம்பிக்கை உள்ளது. எதிர்காலத்தில், இவை அனைத்தும் நடைமுறையில் இருக்கும், எதிர்காலத்தில் இவை அனைத்தும் அனுபவமாக இருக்கும். அதற்காக மக்கள் அனைவரினதும் ஆதரவை எதிர்பார்க்கிறேன் - என்றார். (ஐ)

## பொதுத்...

விக்கிரமசிங்க தலைமையில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்திலேயே இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுப்பது என்றும் இரு கட்சிகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று பொது மக்கள் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜே. வி. பி .தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு எதிரான வலுவான கூட்டணியை அமைப்பதற்கு ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு விடுப்பதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

## பாராளுமன்ற...

நேற்று அவர் தனது இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுரகுமார திஸநாயக்கவுக்கு வாழ்த்துகள். பொதுக் கட்டமைப்பாக சிவில் அமைப்புகளும் தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்து பொது வேட்பாளராக என்னை நிறுத்தின. எனக்கு இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை மக்கள் வழங்கியிருக்கின்றார்கள். அதற்கு இந்த மக்களுக்கு முதற்கண் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தமிழ்த் தேசியத்தில் எமது மக்கள் உறுதியாக இருப்பதையே காட்டுகிறது. இணைந்த வட, கிழக்கு தான் தமிழர்களின் அரசியல் தீர்வு என்பதனை இந்த தேர்தல் வெளிக் காட்டி இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய என்னை இந்தத் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்திய போது, கிழக்கு மாகாணத்தைவிட வடக்கு மாகாணத்தில் மக்கள் அதிகூடிய வாக்குகளை அளித்திருக்கின்றார்கள். விசேடமாக அவர்களுக்கு நன்றி கூறக் கூடியவர்களாக இருக்கின்றோம். பொது வேட்பாளரை தோற்கடிப்போம் என்று கூறியவர்களை நாங்கள் வென்றிருக்கின்றோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இணைந்த வடக்கு, கிழக்கில் ஓர் அரசியல் தீர்வை தருவதற்கான அந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் - மேற்கொள்வார் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது - என்றார். (ஐ)

## அநுரவுடன்...

என்றும் அவர் தனது வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் "எக்ஸ்" தளத்தில் வெளியிட்ட பதிவில்,

"இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றமைக்காக உங்களுக்கு எனது நல்வாழ்த்துகள். இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாகர் கொள்கைகளில் இலங்கை விசேட இடத்தினைக் கொண்டுள்ளது.

நமது மக்களினதும் இப்பிராந்தியம் முழுவதினதும் நலன்களுக்காக நம்மிடையேயான பன்முக ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்குவதற்காக உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற ஆவலுடன் உள்ளேன்." - என குறிப்பிட்டுள்ளார். (அ)

## வடக்கு...

இராஜினாமா செய்தார்.

முன்னாள் ஜனாதிபதிகள் கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கீழ் கடந்த 2019 டிசெம்பர் தொடக்கம் 2021 ஒக்ரோபர் வரையிலும் 2023 மே மாதம் தொடக்கம் நேற்று வரையிலும் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் வடக்கு மாகாண ஆளுநராக பதவியில் இருந்தார்.

இதேவேளை, ஊவா, வட மத்திய, சப்ரகமுவ உட்பட 5 மாகாணங்களின் ஆளுநர்கள் பதவி விலகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## படகுடன்...

இந்நிலையில் அவர் பயணித்த படகு சடலத்துடன் பொன்னாலைப் பகுதியில் நேற்று காலை கரையொ துங்கியுள்ளது.

தகவல் அறிந்த வட்டுக்கோட்டை பொலிஸார். சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் தடயவியல் பொலிஸாரும் தடயங்களை சேகரித்தனர். சடலத்தின் நாடிப் பகுதியில் காயம் ஒன்று காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. திடீர் மரண விசாரணை அதிகாரி சடலத்தின் மீதான மரண விசாரணைகளை மேற்கொண்டதைத் தொடர்ந்து உடற்கூற்று பரிசோத னைக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# புதிய ஜனாதிபதி அநுரகுமாரவுடன் இணைந்து செயல்பட எதிர்பார்ப்பு!

**அமெ. இராஜாங்கத் திணைக்களம்**

கொழும்பு, செப். 24

**ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸநாயக்கவுடன் இணைந்து செயற்பட, நாங்கள் எதிர்பார்த்துள்ளோம் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்- வாக்களிக்கும் உரிமையை அமைதியான முறையில் பயன்படுத்திய இலங்கை மக்களை பாராட்டுகிறோம்.

இந்த தேர்தல், இலங்கையின் ஜனநாயக அமைப்பின் பலம், அமைதி மற்றும் ஜனநாயக வழிமுறைகளின் மூலம், அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில், குடிமக்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும்.

ஒரு நிலையான, வளமான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சமூகத்தை கட்டியெழுப்ப, இலங்கைக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும்.

ஜனநாயக விழுமியங்கள் மற்றும் தேசிய இறையாண்மைக்கு மதிப்பளிக்கும் அடிப்படையிலான, எமது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்காக, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸ நாயக்கவுடன் இணைந்து செயற்பட, நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

நாடுகளுக்கு இடையே பொருளாதார, பாதுகாப்பு மற்றும் ஆழமான ஒத்துழைப்பை மேம்படுத்துவதையும், நாங்கள் எதிர்பார்க்கிறோம் என அமெரிக்க இரா ஜாங்கத் திணைக்களம் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



## ஜனாதிபதியின் செயலராக நந்திக்க சனத் குமாநாயக்க

கொழும்பு, செப். 24

நாட்டின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் செயலாளராக கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் இந்த நியமனக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத் தகவல் திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

பொருளியல் பட்டதாரியான அவர், பல உயர் பதவிகளை வகித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அநுரவை ஜனாதிபதியாக அறிவித்து விசேட வர்த்தமானி வெளியாகியது!

கொழும்பு, செப். 24

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக அநுர குமார திஸநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்து தேர்தல் ஆணைக்குழு அதிவிசேட வர்த்தமானியை நேற்று வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சட்டத்தின் 61ஆவது பிரிவின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக அநுர குமார திஸநாயக்க தெரிவு செய்யப்பட்டதாக அறிவித்து குறித்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.

## தண்ணீர் நிரம்பிய தொட்டியில் விழுந்து 11 மாதக் குழந்தை பலி!

முல்லைத்தீவு, செப். 24

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் தண்ணீர் நிரம்பிய தொட்டியில் விழுந்து குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளதோடு சம்பவத்தில 11 மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தை தனது தாயுடன் குளியலறையில் இருந்த போது தண்ணீர் நிறைந்த தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கியுள்ள நிலையில் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



## முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

கொழும்பு, செப். 24

முப்படைத் தளபதிகளுடன், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று கலந்துரையாடியுள்ளார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, முப்படைத் தளபதிகளுடன் பேச்சு நடத்தினார்.

தேசியப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு முன்னுரிமைகள் குறித்து முப்படைத் தளபதிகளுடன் ஜனாதிபதி அநுரகுமார ஆராய்ந்தார் என தெரிவிக்கப்பட்டது.

## சுவர் இடிந்து வீழ்ந்து வயோதிபர் படுகாயம்

கொழும்பு, செப். 24

புளத்சிங்கள, ஏகல் ஓயா பகுதியிலுள்ள பழைய வீடொன்றின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் நேற்றுக் காலை வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என புளத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர்.

புளத்சிங்கள, அத்துர கோவில் வீதியில் வசிக்கும் 67 வயதான வயோதிபர் ஒருவரே இவ்வாறு காயமடைந் துள்ளார்.

காயமடைந்த குறித்த வயோதிபர் பழைய வீட்டின் சுவர்களை இன்னொரு நபருடன் இணைந்து இடிக்க முற்பட்டபோது ஒருபக்க சுவர் அவர் மீது இடிந்து விழுந்து படுகாயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் அவரை புளத்சிங்கள வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்றதாகவும் மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் ஹொரண ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பொதுப் பாதுகாப்பு அமைச்சுக்கு புதிய செயலராக ரவி செனவிரத்ன!



கொழும்பு, செப். 24

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸநாயக்க நேற்று பதவியேற்றதை அடுத்து இந்த நியமனம் வழங்கப்பட்டது. (அ)

## “அநுரவின் ஆட்சி இன, மத பேதமற்றதாக அமையும்!”

கல்முனை, செப். 24

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க, மக்கள் எதிர்பார்த்த மாற்றத்துக்கு ஏற்ப இன மத பேதமற்ற ஆட்சி முன்னெடுப்பார்- இவ்வாறு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மு. இராஜேஸ்வரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பல்லாண்டு காலமாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் இன்னோரன்ன பிரச்னைகள் அநுரவின் ஆட்சிக் காலத்தில் தீர்த்து வைக்கப்படும் என்று பெரிதும் நம்புகிறேன்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல, தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக்கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப்படுகின்றன. எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே ஆளவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில் பேசியிருந்தேன். எமக்கு எல்லை நிர்ணயம் தேவையில்லை. உடனடியாக கணக்காளர் நியமிக்கப்பட வேண்டும்.

நான் மாகாண சபை உறுப்பினராக இருந்த போது நாவிதன்வெளி, சம்மாந்துறை, கல்முனை வலய தமிழ்ப் பாடசாலைகளை உள்ளடக்கிய கல்முனை வடக்கு கல்வி வலயம் உருவாக வேண்டியதன் அவசியம் கருதி பல முன்னெடுப்புக்களை செய்திருந்தேன். அதனை நிவர்த்தி செய்து தரவேண்டும் எனும் கோரிக்கையையும் முன்வைக்கிறேன். பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## அடுக்குமாடி குடியிருப்பு அருகில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, செப். 24

மாளிகாவத்தை லக்ஹிரு செவன அடுக்குமாடிக் குடியிருப்புக்கு அருகில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார்.

அடுக்குமாடிக் குடியிருப்புக்கு அருகில் உந்துருளியில் பிரவேசித்த இனந்தெரியாத இருவரினால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 24.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.